கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (மீள்பரீட்சை)

(யூலை/ஆகஸ்ட் 2017) (வெளிவாரி)

LIBRARY 21 EASTERN UNIVERSITY, SRI LANKA

**PS 201** அரசியலமைப்பு அபிவிருத்தியும் சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கை அரசாங்கமும் அரசியலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

---

01. "கோல்புருக்கமரன் சீர்திருத்தங்கள் இலங்கை அரசியல் அமைப்பு அபிவிருத்தியை வேறொரு யுகத்திற்கு இட்டுச் சென்றது" சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் நீதி முறையில் ஏற்பட்ட சீர்திருத்தங்களை அடிப்படையாக வைத்து இக்கூற்றினை விமர்சிக்குக.
(20 புள்ளிகள்)

02. டொனமூர் சீர்திருத்தங்களில் ஒன்றில் சர்வஜன வாக்குரிமை அல்லது நிர்வாகக்குழுவாட்சி முறை ஏற்படுத்திய தாக்கத்தைப் பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

03. சோல்பரி அரசியல் அமைப்பில் சிறுபான்மையோர் காப்பீடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டவாற்றை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

04. 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் தேசியரசுப் பேரவையின் மீயுயர் தன்மையைப் பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

05. 1947 மற்றும் 1972 அரசியலமைப்புக்களைபின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) சட்டசபையின் கட்டமைவு
(ஆ) சட்டசபையின் அதிகாரங்கள்
(இ) நாம நிர்வாகியின் வகிபங்கு

(20 புள்ளிகள்)

06. "1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நிறைவேற்று ஜனாதிபதி ஒரு யாப்புச் சர்வாதிகாரி" இக்கூற்றினை விமர்சன முறையில் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(அ) 19வது யாப்புத் திருத்தம்
(ஆ) தகவலறியும் சட்டம்.

(20 புள்ளிகள்)

08. சமகால இலங்கை அரசியலில் மதம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விமர்சிக்கு.

(20 புள்ளிகள்)